## மார்ச் - 18 - சனி

### ஜெருசலேம் புனித சிறில்

**என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் முழு உளமே! ஆவரது திருப்பெயரை ஏத்திடு! திபா. 103:1**

---

### முதல் வாசகம்: மீக்கா 7: 14 – 15, 18 – 20

ஆண்டவரே, உமது உரிமைச் சொத்தாய் இருக்கும் மந்தையாகிய உம்முடைய மக்களை உமது கோலினால் மேய்த்தருளும்! அவர்கள் கர்மேலின் நடுவே காட்டில் தனித்து வாழ்கின்றார்களே! முற்காலத்தில் நடந்ததுபோல அவர்கள் பாசானிலும் கிலயாதிலும் மேயட்டும்! எகிப்து நாட்டிலிருந்து நீங்கள் புறப்பட்டுவந்த நாளில் நடந்ததுபோல நான் அவர்களுக்கு வியத்தகு செயல்களைக் காண்பிப்பேன். உமக்கு நிகரான இறைவன் யார்? எஞ்சியிருப்போரின் குற்றத்தைப் பொறுத்து நீர் உமது உரிமைச் சொத்தில் எஞ்சியிருப்போரின் தீச்செயலை மன்னிக்கின்றீர் உமக்கு நிகரானவர் யார்? அவர் தம் சினத்தில் என்றென்றும் நிலைத்திரார் ஏனெனில், அவர் பேரன்புகூர்வதில் விருப்பமுடையவர் அவர் நம்மீது இரக்கம் காட்டுவார் நம் தீச்செயல்களை மிதித்துப் போடுவார் நம் பாவங்கள் அனைத்தையும் ஆழ்கடலில் எறிந்து விடுவார். பண்டைய நாளில் எங்கள் மூதாதையருக்கு நீர் ஆணையிட்டுக் கூறியதுபோல யாக்கோபுக்கு வாக்குப் பிறழாமையையும் ஆபிரகாமுக்குப் பேரன்மையும் காட்டியருள்வீர்.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்

### நற்செய்தி: லூக்கா 15: 1 – 3, 11 – 32

அக்கால்தில் வரிதண்டுவோர், பாவிகள் யாவரும் இயேசு சொல்வதைக் கேட்க அவரிடம் நெருங்கிவந்தனர். பரிசேயரும், மறைநூல் அறிஞரும், "இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே" என்று முணுமுணுத்தனர். அப்போது அவர் அவர்களுக்கு இந்த உவமையைச் சொன்னார் "ஒருவருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களுள் இளையவர் தந்தையை நோக்கி, "அப்பா, சொத்தில் எனக்கு உரிய பங்கைத் தாரும்" என்றார். அவர் சொத்தை அவர்களுக்குப் பகிர்ந்து அளித்தார். சில நாள்களுக்குள் இளைய மகன் எல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு, தொலை நாட்டிற்கு நெடும் பயணம் மேற்கொண்டார் அங்குத் தாறுமாறாக வாழ்ந்து தம் சொத்தையும் பாழாக்கினார். அனைத்தையும் அவர் செலவழித்தார். பின்பு அந்த நாடு முழுவதும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் வறுமையில் வாடினார் எனவே அந்நாட்டுக் குடிமக்களுள் ஒருவரிடம் அண்டிப் பிழைக்கச் சென்றார். அவர் அவரைப் பன்றி மேய்க்கத் தம் வயல்களுக்கு அனுப்பினார். அவர் பன்றிகள் தின்னும் நெற்றுகளால் தம் வயிற்றை நிரப்ப விரும்பினார். ஆனால் அதைக்கூட அவருக்குக் கொடுப்பார் இல்லை. அவர் அறிவு தெளிந்தவராய், "என் தந்தையின் கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்குப் பசியால் சாகிறேனே! நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய், "அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன் இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன் உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன்" என்று சொல்லிக்கொண்டார். "உடனே அவர் புறப்பட்டுத் தம் தந்தையிடம் வந்தார். தொலையில் வந்துகொண்டிருந்தபோதே அவர் தந்தை அவரைக் கண்டு, பரிவு கொண்டு, ஓடிப்போய் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார். மகனோ அவரிடம், "அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன் இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்" என்றார். தந்தை தம் பணியாளரை நோக்கி, "முதல்தரமான ஆடையைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள் இவனுடைய கைக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும் அணிவியுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள் நாம் மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம். ஏனெனில் என் மகன் இவன் இறந்துபோயிருந்தான் மீண்டும் உயிர் பெற்று வந்துள்ளான். காணாமற்போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான்" என்றார். அவர்கள் மகிழ்ந்து விருந்து கொண்டாடத் தொடங்கினார்கள். "அப்போது மூத்த மகன் வயலில் இருந்தார். அவர் திரும்பி வீட்டை நெருங்கி வந்துகொண்டிருந்தபோது, ஆடல் பாடல்களைக் கேட்டு, ஊழியர்களுள் ஒருவரை வரவழைத்து, "இதெல்லாம் என்ன?" என்று வினவினார். அதற்கு ஊழியர் அவரிடம், "உம் தம்பி வந்திருக்கிறார். அவர் தம்மிடம் நலமாகத் திரும்பி வந்திருப்பதால் உம் தந்தை கொழுத்த கன்றை அடித்திருக்கிறார்" என்றார். அவர் சினமுற்று உள்ளே போக விருப்பம் இல்லாதிருந்தார். உடனே அவருடைய தந்தை வெளியே வந்து, அவரை உள்ளே வருமாறு கெஞ்சிக் கேட்டார். அதற்கு அவர் தந்தையிடம், "பாரும், இத்தனை ஆண்டுகளாக நான் அடிமைபோன்று உமக்கு வேலை செய்துவருகிறேன். உம் கட்டளைகளை ஒருபோதும் மீறியதில்லை. ஆயினும், என் நண்பரோடு நான் மகிழ்ந்துகொண்டாட ஓர் ஆட்டுக்குட்டியைக்கூட என்றுமே நீர் தந்ததில்லை. ஆனால் விலைமகளிரோடு சேர்ந்து உம் சொத்துகளையெல்லாம் அழித்துவிட்ட இந்த உம் மகன் திரும்பி வந்தவுடனே, இவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கிறீரே!" என்றார். அதற்குத் தந்தை, "மகனே, நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய் என்னுடையதெல்லாம் உன்னுடையதே. இப்போது நாம் மகிழ்ந்துகொண்டாடி இன்புற வேண்டும். ஏனெனில் உன் தம்பி இவன் இறந்து போயிருந்தான் மீண்டும் உயிர்பெற்றுள்ளான். காணாமற்போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான்" என்றார்."

**தியானம்:** நீ நொறுக்கப்பட்டதை எண்ணி ஏன் அழுகின்றாய்? உனது வேதனையைத் தணிக்க முடியாது ஏனெனில் உனது குற்றமோ பெரிது உன் பாவங்களோ எண்ணற்றவை எனவே இவற்றை எல்லாம் நான் உனக்குச் செய்தேன்'' (எரே 3:16) இன்றைய வாசகங்கள் நமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடம் என்னவென்றால் நம்முடைய துன்பங்களுக்கு அடிப்படைக் காரணம் நம்முடைய பாவங்களே! இறைவனுக்கு எதிராக நாம் செய்யும் பாவங்கள் நமக்கு துன்பங்களை விளைவிக்கின்றன. நம்முடைய பாவங்கள் நமக்கும் இறைவனுக்கும் இடையே பெரிய இடைவெளியை ஏற்படுத்தி விடுகின்றது எனவே நமக்கும் இறைவனுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் விரிசலை சரிசெய்ய இன்றைய நற்செய்தி வாசகத்தில் நாம் பார்க்கும் ஊதாரி மைந்தன் போல் தன்னிலை உணர்ந்து அறிவுத் தெளிவு பெற வேண்டும் (லூக் 15:17). நான் எங்கிருந்து வந்தேன்? என்னுடைய அடையாளம் என்ன? நான் யாருடைய பிள்ளை? என்னுடைய தந்தை யார்? என்பது போன்ற கேள்விகளுக்கு ஊதாரி மைந்தனைப் போன்று அமர்ந்து சிந்திக்க வேண்டும். "நீங்கள் எந்தப் பாறையினின்று செதுக்கப்பட்டீர்களோ, எந்தக் குழியினின்று தோண்டப்பட்டீர்களோ அதை நோக்குங்கள்'' (எசா 51:1). "மக்களே என்னிடம் திரும்பி வாருங்கள் ஏனெனில் நானே உங்கள் தலைவன்'' (எரே 3:14) என்ற இறைவார்த்தைகள் நமக்கு உணர்த்துவது போன்று நம்மைப் படைத்த தந்தையிடம் நாம் திரும்பி வரவேண்டும், கடவுளில் நம்முடைய அடையாளங்களை காண அறிவுத் தெளிவு பெற வேண்டும், இறைவனிடத்தில் மன்னிப்பையும், இரக்கத்தையும் வேண்டிக் காத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யும் போது நம்முடைய இரக்கத்தின் முகமான இயேசு நம்முடைய பாவங்களைத் தூக்கி எறிந்து விட்டு நம்மைக் கட்டித்தழுவி முத்தமிட்டு தம்முடைய பிள்ளைகளுக்குரிய உரிமை வாழ்வை அளிப்பார். "கடவுள் நம் பாவங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதில்லைஞ நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மைத் தண்டிப்பதில்லை. அவர் தமக்கு அஞ்சுவோர்க்குக் காட்டும் பேரன்பு மண்ணின்று விண்ணளவு போன்று உயர்ந்தது. தந்தை தம் பிள்ளைகள் மீது இரக்கம் காட்டுவதுபோல் ஆண்டவர் தமக்கு ஆஞ்சுவோர்மீது இரங்குகின்றார்'' (திபா 103:10-11,13). இயேசுவின் அன்பும் இரக்கமும் நம்முடைய பாவங்களை விட மிகப்பெரியது எனவே நாம் அவருடைய வல்லமைமிக்க கரங்களில் நம்மையும் நம்முடைய பாவங்களையும் ஒப்புக்கொடுப்போம் அவரே தன்னுடைய அன்பால் நம்மை நலன்களைக் காணச் செய்வார்.--